## DEWATS என்றால் என்ன?


**DEWATS** திட்டம் கீழ்கண்ட சிறப்புத் தன்மைகளை உட்கொண்டுள்ளது.

- மாறுபட்ட கழிவுநீரின் தன்மைக்கு ஏற்ப உகந்த செலவில் சுத்திகரிப்பு செய்தல்
- கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்ட பிறகு அவற்றின் தரம் சுற்று சூழல் விதிகளுக்கு உட்பட்டதாக உள்ளது.
- நாள் ஒன்றிற்கு 1-1000$m^3$ அளவிலான கழிவுநீரை சுத்திகரித்தல்
- கழிவுகளின் உள்வரக்கூடிய அளவுகளின் ஏற்றத்தாழ்வுகளுக்கு ஏற்புடைய திறன்
- திறன்மிக்க மூலதன பயன்பாடு மற்றும் மின் சக்தி (அ) வேதியியல் பொருள்களை சாராதிருத்தல்
- குறைந்தபட்ச பராமரிப்பு
- நம்பகத்தன்மை மற்றும் நீண்ட கால பயன்பாடு
- கழிவு நீர் மற்றும் அதன் உட்பொருள்களின் பயன்பாடு

**முதன்மையான சுத்திகரிப்பு கோட்பாடுகள் வருமாறு**

- செட்லர், செப்டிக் டேங்க் மற்றும் இன்காப்ஃ தொட்டியில் முதற்கட்ட சுத்திகரிப்பு மற்றும் வீழ்படிவுகளை ஏற்படுத்துதல்
- தொட்டிகளை கொண்ட வினைகலன் மற்றும் தொட்டிகளை கொண்ட வடிகட்டியில் இரண்டாவது கட்டமாக காற்றில்லா முறையில் சுத்திகரிப்பு அடைதல்.
- மணல் வடிகட்டி செடிகளை கொண்ட ஜல்லி வடிகட்டி மற்றும் சேகரிக்கும் தொட்டியில் காற்றுடன் / காற்றில்லா முறையில் இறுதிகட்ட சுத்திகரிப்பு அடைதல்.

சில சந்தர்ப்பங்களில் வேதியியல் முறையில் முதற்கட்ட சுத்திகரிப்பிற்கு தேவையுள்ளதாக இருக்கும் (அ) இட நெருக்கடி உள்ள இடத்தில் இறுதி கட்ட சுத்திகரிப்பிற்கு Compact aeration ஏற்படுத்திக் கொள்ளலாம்.









# DEWATS

# இந்தியாவுக்கான திட்டம்

தொலைநோக்கோடு சிந்தித்து
இப்பொழுதே செயல்படு !

**பரவலாக்கப்பட்ட கழிவுநீரை சுத்திகரிப்பு முறை**

- ✤ **திறன் மிக்க செயல்பாடு**
- ✤ **கையாள்வது எளிது**
- ✤ **நீண்ட நாட்களுக்கு பழுதற்ற சேவை**
- ✤ **குறைந்த செலவு**

## பரவலாக்கப்பட்ட கழிவு நீர் சுத்திகரிப்பு முறைகளை மேலும் பல இடங்களுக்கு விரிவாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்

### இந்தியாவில் DEWATS திட்டம்

DEWATS இந்தியா திட்டமானது தனிப்பட்ட ஒத்துழைப்பு முறையில் ஜெர்மனிக்கும் இந்தியாவில் உள்ள லாப நோக்கமற்ற அரசு சாரா அமைப்புகளுக்கும் இடையேயான ஒரு திட்டமாகும். ஐரோப்பிய கூட்டமைப்புக் குழு மற்றும் ஜெர்மன் அரசின் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான கூட்டு அமைச்சகம் மூலம் நிதி உதவி அளிக்கப்படுகிறது.

### திட்டத்தின் நோக்கம்

இந்தியாவில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர அமைப்புகளுக்கும், நிறுவனங்களுக்கும், சமுதாய பிரிவுகளுக்கும் திட்டமிடல், வரைவு தயாரித்தல் மற்றும் திறன்மிக்க நம்பகத்தன்மையுடன் கூடிய செலவு குறைந்த உள்ளூர் பழக்கங்களுக்கு ஏற்ப கழிவு நீர் சுத்திகரிப்பு திட்டங்களுக்கு ஆதரவளிப்பது இதன் நோக்கமாகும்.

DEWATS என்பது ஒருமுகப்படுத்தப்பட்ட தொழில் நுட்ப வடிவமைப்பு மற்றும் கழிவுநீர் அகற்று முறைகளை அடிப்படையாக கொண்டது. கழிவுநீர் அகற்றுதலில் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் பயன்பாடும் இந்த ஒருங்கிணைந்த திட்ட நிறைவேற்றுதலில் இணைந்ததாகும். ஆசியா கண்டத்தில் இந்தியாவில் மட்டுமின்றி இந்தோனேசியா, சீனா, வியட்நாம் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் போர்டா மூலம் DEWATS திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.



### திட்ட பின்னணி

இந்தியாவில் நகரப் பகுதிகளிலும், பேரூராட்சி பகுதிகளிலும் கழிவுநீர் திட்டத்திற்கான கோரிக்கைகள் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது. உண்மையில் சொல்ல வேண்டுமெனில் இன்றைக்கு சந்தையில் கிடைக்கக் கூடிய மிக நவீனமான கழிவுநீர் சுத்திகரிப்பு முறைகளை வாங்குவதற்கான சக்தி சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங் களாலும், சமுதாய அமைப்புகளாலும் முடிவதில்லை. அதுமட்டுமல்லாது கழிவுநீர் சுத்திகரிப்பு முறையை நிறைவேற்றுவதற்கான மூலதனம் மேற்குறித்த அமைப்புகளுக்கு எட்ட கூடிய அளவில் இல்லை. இதற்கு காரணம் அதிகமான எரிசக்தி, செலவீனம், அதிகமான பராமரிப்பு செலவீனமும் ஆகிறது. இந்த சூழ்நிலையில் தான் DEWATS கருத்தாக்கமான ஒரு சரியான மாற்று ஏற்பாட்டையும் நீடித்த நிலைத்த தன்மையையும் சிக்கனமான தொழில்நுட்ப முறைகளையும் அளிக்கிறது. சமுதாயத்தின் தேவைக்கும் சுகாதார வாழ்வுக்கும் இடையேயுள்ள இடைவெளியை நிரப்புகிறது.



### பரவலாக்கம் மற்றும் மேம்பாடு

★ திறன் மேம்பாடு


சிறப்பான பயிலரங்கம் மற்றும் பயிற்சிகளின் மூலம் சம்பந்தப்பட்ட பல்வேறு பங்குதாரர்களுக்கு திறன் மேம்பாட்டிற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

★ முன் மாதிரி திட்டம்

நாட்டின் பல்வேறு பகுதிகளில் குறிப்பிடத்தக்க இடங்களில் பல வகையான மாசுகளை ஏற்படுத்துகின்ற மையங்களிலும் DEWATS ஒரு முன் மாதிரி திட்டமாக நிறுவப்பட்டுள்ளது.

★ செயலாக்கம்

அரசுதுறை, சட்டரீதியில் இயக்கும் தனியார் நிறுவனங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தி அவர்களின் செயல்திட்டத்தில் DEWATS சேர்க்கப்படுகிறது. இது இந்தியாவில் 60க்கும் மேற்பட்ட இடங்களில் நிறுவப்பட்டுள்ளது. மேலும் CDD அமைப்பு தொழில் நுட்ப நிறுவனங்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு டிவாட்ஸ் வடிவமைத்தல் மற்றும் கட்டுமானத்திலும் உதவும்.



DEWATS சூழ்நிலைக்கு தக்க வடிவமைப்பதின் மூலம் நல்ல வரவேற்பை பெறுகிறது.

### இயக்கம் மற்றும் பராமரிப்பு

இந்தியாவில் DEWATS திட்டத்தில் பயனீட்டாளர்களின் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு DEWATS அமைப்பின் இயக்கம் மற்றும் பராமரிப்புகள் குறித்த பயிற்சிகளுக்கு வாய்ப்பு அளிக்கிறது.

